## ① கீழ்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி (X) இடுக.

1. பாண்டியர் கழகம் அமைத்த இடம்
   (அ) திருச்சி (ஆ) இராமேசுவரம் (இ) மதுரை (ஈ) சென்னை
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

2. பழந்தமிழ் நாட்டில் காணப்பட்ட கழகங்களின் எண்ணிக்கை
   (அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு (ஈ) ஒன்று
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

3. வயலும் வயல் சார்ந்த இடமும்
   (அ) குறிஞ்சி (ஆ) மருதம் (இ) முல்லை (ஈ) நெய்தல்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

4. புறநானூறு என்ற நூலில் நிறைந்து காணப்படுவன
   (அ) காதல் (ஆ) மானம் (இ) ஈதல் (ஈ) வீரம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

5. மெல்லின மெய்களுக்குப் பொருத்தமான எழுத்துக் கூட்டம்
   (அ) ங், ஞ், ண் (ஆ) ய், ர், ல் (இ) த், ப், ற் (ஈ) வ், ழ், ள்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

6. சார்பெழுத்துகளின் எண்ணிக்கை
   (அ) 218 (ஆ) 212 (இ) 216 (ஈ) 217
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

7. **‘செவ்வழி’** என்பதன் பொருள்
   (அ) காலைப்பண் (ஆ) புணர்ச்சி
   (இ) ஓசை (ஈ) ஆரவாரம்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

8. உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்துக்குச் சரியான எடுத்துக்காட்டு
   (அ) காது (ஆ) முரசு (இ) பத்து (ஈ) கன்று
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

9. ‘தலைவர் தொண்டரைப் பாராட்டினார்.’ இச்சொல்லியத்தில் வரும் செயப்படுபொருள்
   (அ) தலைவர் (ஆ) பாராட்டினார்
   (இ) தொண்டர் (ஈ) செயப்படுபொருள் இல்லை
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

10. இமயவரம்பன் எனப் பெயர்பெற்ற அரசன்
    (அ) சோழன் (ஆ) சேரன் செங்குட்டுவன்
    (இ) நெடுஞ்சேரலாதன் (ஈ) பாண்டியன்
    (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

11. 'இன்று பாடசாலை நடைபெறவில்லை.' இவ்வாக்கியம்
(அ) செப்பு வாக்கியம் (ஆ) வினா வாக்கியம்
(இ)விருப்புவாக்கியம் (ஈ) வியங்கோள்வாக்கியம்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

12. சிலப்பதிகாரத்தை எழுதியவர்
(அ) கம்பர் (ஆ) இளங்கோவடிகள்
(இ) திருவள்ளுவர் (ஈ) புகழேந்தி
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

13. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்
(அ) நூறு (ஆ) முப்பது
(இ) இருபது (ஈ) இருநூற்றுப்பதினாறு
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

14. 'வடதிசை' என்பதைப் பிரித்து எழுதினால்
(அ) வட + திசை (ஆ) வ + திசை
(இ) வடக்கு + திசை (ஈ) வடகீழ் + திசை
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

15. சாவுக்கஞ்சாது மாந்தர் செய்யவேண்டிய முதற்கடமை
(அ) உயிரைக் காப்பது (ஆ) நாட்டைக் காப்பது
(இ) பணத்தைக் காப்பது (ஈ) வீட்டைக் காப்பது
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

16. 'தங்கை' என்னும் சொல்லின் இலக்கணப்பெயர்
(அ) தனிமொழி (ஆ) தொடர்மொழி (இ) பொதுமொழி (ஈ) சகோதரி
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

17. கணிகன் என்பதன் பொருள்
(அ) சோதிடன் (ஆ) புலவர்
(இ) ஆசிரியர் (ஈ) இறைவன்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

18. இந்தியா முழுவதும் தமிழ்நாடாக இருந்தபோது அதன் பெயர்
(அ) இலெமூரியா (ஆ) குமரிக்கண்டம் (இ) இமயம் (ஈ) நாவலந்தீவு
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

19. '**பரிதி**' என்பதன் பொருள்
(அ) சந்திரன் (ஆ) கதிரவன் (இ) புவி (ஈ) கடல்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

20. மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரக்கூடிய வினா எழுத்து ஒன்று தருக.
(அ) ஆ (ஆ) எ (இ) ஏ (ஈ) ஓ
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

**(புள்ளிகள் 20)**

**② மாறிக்கிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

1. இன்பங்கள் / படைப்பிலே / குவிந்து /இயற்கையின் / கிடக்கின்றன

2. கார்முகில்கள் / உரச / ஒன்றோடொன்று /இடி / முழங்குகிறது

3. அமையம் / படை / பார்ப்பதற்காக / நகர்வதற்கு / அரசவை / கூடிற்று

4. தூறுசெய்ய / தமிழைப் / அவன் / உள்ளத்திலே / பழித்தவரைத் / மூண்டது / வஞ்சினம்

5. சங்கொலி / எனது / எழுந்தது / தமிழ்ப்படை / கேட்டு

**(புள்ளிகள் 10)**

## ③ தமிழ்மொழியில் தரப்பட்டுள்ள பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

பலநாட்டு மாணவர்கள் ஒரு சந்திப்பின் போது, ஒவ்வொருவரும் தத்தமது நாட்டினைப் பற்றிப் பெருமையுடன் கூறிக்கொண்டனர். என் நாடுதான் முதன்முதலில் ‘‘உலகத் தொழிலாளரே ஒன்று படுங்கள்’’ என்று முழங்கி, புதிய உலகை விழித்தெழச் செய்தது என்றான் ருசிய மாணவன். ‘தனிமனித வளர்ச்சியே தேவை என்ற தத்துவத்தால் உயர்வடைந்த நாடு என் நாடு’ என்றான் அமெரிக்கன். ‘காந்தீயம் என்னும் அருளாண்மை எமது சொத்துடைமை என்று கூறினாலும் சிறுபான்மை இனங்களை அடக்குவதில் வெற்றிகொண்ட ஆரிய நாடு என் நாடு’ என்று தோளை நிமிர்த்தினான் இந்தியன். பிறநாடுகளிடம் கையேந்தலாகாது என்று தன் மக்கள் வலுவை உலகறியச் செய்த நாடு எங்கள் சீனா என்றான் சீனன். நாட்டின் மக்களையே முள்வேலிக்குள் அடைக்கும் நாடு என் நாடு என்று கூறமுடியுமா? என்றெண்ணித் தலைகுனிந்தான் ஒரு மாணவன்.

**(புள்ளிகள் 10)**

**④ பாடநூல் வினாக்கள் - இலக்கணவினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. கழக இலக்கியங்களில் அகம், புறம் என்று சுட்டப்படுவன யாவை?

2. மட்டக்களப்பு எத்தகைய வளம் கொண்டது?

3. இமயத்தில் எடுத்த கல்லைத் தமிழகம் வரை சுமந்து வந்தவர் யார்?

4. இலெமூரியா கண்டத்தின் பழந்தமிழ்ப் பெயர் என்ன?

5. அடைமொழி என்றால் என்ன? அவை எவை? எடுத்துக்காட்டுடன் எழுதுக.

6. அறுவகைப்பெயர்ச்சொற்களையும் தந்து அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

7. தெரிநிலைவினை என்றால் என்ன? எடுத்துக்காட்டு ஒன்று தருக.

**(புள்ளிகள் 15)**

## ⑤ பின்வருனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து எழதுக.

**(அ)** பின்வரும் பந்தியை வாசித்து அதன் சாரம்சத்தை (கருத்தை) மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

வைகறைப் பொழுதில் பூமியின் கிழக்குத்திசை வெளுத்துத் தோன்றுகிறது. பூமாதேவியைக் கௌவி மூடிக்கொண்டிருந்த காரிருள் மெல்லமெல்ல விலகிக்கொண்டிருக்கிறது. உச்சி வானத்தில் வைரங்களை வாரி இறைத்தது போலப் பிரகாசித்துக்கொண்டிருந்த விண்மீன்கள் ஒளி குறையத்தொடங்குகின்றன. கிழக்கு வானம் செக்கச்சிவந்து பிரகாசிக்கிறது. கதிரவன் தனது பொன்மயமான கதிர்களைப் பூமாதேவியின் மீது மெல்லமெல்லப் படரவிடுகிறாள். கிழக்கு வானிலே முகிற்கூட்டங்களுக்கு மத்தியில் தங்கத்தகட்டைப்போல பகலவன் அசையத் தொடங்குகிறான். “சூரிய பகவானே வருக” எனச் சகல உயிர்களும் அவனை வரவேற்கின்றன. தாமரை மலர்கள் தம் துணைவனை முகமலர்ந்து வரவேற்கின்றன. ஏனைய பல மலர்களும் மொட்டவிழ்ந்து விரிகின்றன. சேவல்கள் நாற்புறமும் மாறிமாறிக் கூவுகின்றன. காகங்கள் கரைகின்றன.

**(ஆ)** கீழ்வரும் பாடலை வாசித்து, இதன் கீழுள்ள வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.

வேரல் வேலி வேர்க்கோள் பலவின்
சாரல்நாட செவ்வியை ஆகுமதி
யார் அஃது அறிந்திசினோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு இவள்
உயிர் தவச்சிறிது காமமோ பெரிதே.

1. **'வேரல்'** என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைத் தருக?

2. இப்பாடலில் காணப்படும் உரிச்சொல் எது?

3. இப்பாடல் யார் யாருக்குக் கூறுவதாக அமைந்துள்ளது.

4. இப்பாடலில் **'பெரும்பழம் '** என்று குறிக்கும் பழம் எது?

5. இப்பாடலின் கருத்தை சுருக்கமாகத் தருக.

**(இ)** கீழே தரப்பட்டுள்ள படத்தின்மூலம் நீர் உணர்ந்து கொள்வதை 10 வசனங்களில் எழுதுக.



**(புள்ளிகள் 10)**

## ⑥ பந்தியை வாசித்துத் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

### எரிமலை

எரிமலை என்பது பூமியின் உட்புறத்தில் உள்ள சூடான கற்குழம்பு, சாம்பல், வளிமங்கள் போன்றவை வெளியேறத்தக்க வகையில் புவி மேலோட்டில் உள்ள துவாரம் அல்லது வெடிப்பு ஆகும். மலைகள் அல்லது மலை போன்ற திட்டுக்களை உருவாக்கும் விதமாக, நீண்ட காலத்திற்கு பாறைகளை வெளித்தள்ளும் நிகழ்வோடு எரிமலை நடவடிக்கை தொடர்பு பட்டுள்ளது. 'வால்கனோ' என்ற சொல் இத்தாலிய மொழியிலிருந்து பெறப்பட்ட ரோமானியர்களின் நெருப்புக் கடவுளான 'வால்கன்' என்னும் பெயரிலிருந்து பெறப்பட்டதாகும்.

பொதுவாக 'டெக்டோனிக் அடுக்குகள்', அதாவது தட்டுப் புவிப்பொறைக் கட்டமைப்பு என்பது பூமியின் உட்பகுதி வெளிக் கற்கோளம் மற்றும் உள் மென்பாறைக்கோளம் ஆகிய இரண்டு படைகளால் ஆனது. கற்கோளம் மென்பாறைக்கோளத்தின் மீது மிதந்து கொண்டு இருப்பதுடன், பத்துத் தட்டுகளாகப் பிரிந்தும் உள்ளன. இவை ஆபிரிக்க, அண்டார்ட்டிக், ஆஸ்திரேலிய, யூரேசிய, வடஅமெரிக்க, தென்அமெரிக்க, பசிபிக், கோகோஸ், நாஸ்கா மற்றும் இந்தியத் தட்டுகள் எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன.

இந்த டெக்டோனிக் அடுக்குகள் விலகிச் செல்வதால் எரிமலைகள் ஏற்படுகின்றன. இவை ஒன்றோடொன்று சாய்ந்திருக்கும் நிலையில் வழக்கமாக எரிமலைகள் உருவாவதில்லை. பூமி ஓடு நீண்டு செல்கின்ற அல்லது மெலிவடைகின்ற இடங்களிலும் எரிமலைகள் உருவாகின்றன. இது 'வெப்பப் பகுதி அல்லாத இன்ட்ராபிளேட் எரிமலை' எனப்படுகிறது.

1. எரிமலை என்பது என்ன?

_______________________________________________

_______________________________________________

2. எரிமலை வால்கனோ என அழைக்கப்படுகிறது, வால்கனோ என்ற சொல் எப்படி ஏற்பட்டது?

_______________________________________________

_______________________________________________

3. ‘டெக்டோனிக் அடுக்குகள்’ எனப்படும் படையாக உள்ள இருவகை அடுக்குகள் எவை?

4. பத்து தட்டுகளாகப் பிரிந்திருக்கும் ‘டெக்டோனிக் அடுக்குகளையும்’ தருக?

5. பூமி ஓடுகள் நீண்டு செல்கின்ற, மெலிவடைகின்ற இடங்களில் ஏற்படும் எரிமலையை எப்படி அழைப்பர்?

**(புள்ளிகள் 15)**

**⑦ பின்வரும் தலைப்புக்களில ஒன்றைத் தெரிவு செய்து, 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. புலம்பெயர் நாடுகளில் வாழும் மாணவர்கள் தாய்மொழியாகிய தமிழைக் கற்றுக் கொள்வதில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்க.
2. தமிழைக் கற்பதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி உமது கருத்தை வடிவமைக்கவும்.
3. கல்வியும் ஒழுக்கமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவை. இதை விளக்கி எழுதுக.
4. மதுவும் புகைத்தலும் தனிமனித பாதிப்பு மட்டுமன்றி பொது மக்களையும் பாதிக்கின்றது.
5. ஈராக் அழிந்து
   சிதைந்த பிறகுதான்
   தெரிந்தது
   பேரழிவு ஆயுதங்கள்
   எவர் கையில்
   இருந்தது என்பது.

**( புள்ளிகள் 20 )**